நாகப்பட்டினம் நகராட்சி

**2022–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27–ம் நாள் வியாழன் கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற்ற நகரமன்ற சாதாரன கூட்ட நடவடிக்கையின் தீர்மான நகல்**

| கூட்ட நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்களின் விபரம் | தீர்மான எண் |
|---|---|---|
| 27–10–2022 | பொருள் எண்.1<br>தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 24-B, 24-H மாநகராட்சிகள் சட்டம் பிரிவுகளின்படி வார்டு குழு மற்றும் பகுதி சபா உருவாக்குவதற்கும் மற்றும் அதன் செயல்பாடுகளுக்கும் விதிகள் குறித்து வரபெற்ற அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்.24–06–2022 மற்றும் குழு செயலாளர் நியமிப்பது குறித்து வரப்பெற்ற அரசாணை (நிலை) எண்.93 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 24–06–2022 ஆகிய இரண்டு அரசாணைகளும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.<br>அரசாணைகளில் தெரிவித்துள்ளப்படி வார்டு குழு அமைத்தல் பகுதி சபா குழு உறுப்பினர் நியமனம் செய்வதற்கும் மற்றும் வார்டில் உள்ள தெருக்கள் வாரியாக நான்கு பகுதி சபா அமைத்து மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அரசாணையின்படி சபா குழு உறுப்பினர்களை நியமனம் செய்யப்படும் நபர்களிடமிருந்து படிவம் 1–ல் மேற்படி நபர்களின் விண்ணப்பத்தினை பெறுவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு — 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3145/2022/எப்1 | தீர்மானம் எண்.345<br>அ.கு.அனுமதிக்கப்பட்டு அதற்கான செலவினத்திற்கும் ஒப்புதல் வைக்கப்பட்டது. |
| 27–10–2022 | பொருள் எண்.2<br>நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 2073/2022/ஊ.வ.11 எண்ணிட்ட கடிதத்தில் நாகப்பட்டினம் மாவட்டம் தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் மாதாந்திர கூட்ட தீர்மானத்தின்படி அனைத்து ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் அனைவருக்கும் தெரியும்படி Child Help Line 1098 மற்றும் 14417 என்ற எண்கள் அடங்கிய அறிவிப்பு பலகைகள் வைத்திட தெரிவிக்கப்பட்டுள்ளதால் நாகப்பட்டினம் நகராட்சி மிக முக்கிய பகுதிகளில் மேற்கண்ட எண்கள் கொண்ட அறிவிப்பு பலகை வைப்பதற்கும் அதற்குரிய உத்தேச செலவினம் ரூ.10,000–ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கும் மன்றித்தின் அனுமதிவேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு — 1. மன்றம்அனுமதி வழங்கலாம்<br>2. மேற்கண்ட பணியினை உடன் செய்ய வேண்டியதன் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கும் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.3738/2022/சி2 | தீர்மானம் எண்.346<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 27–10–2022 | பொருள் எண்.3<br>நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான இரண்டு எண்ணிக்கையிலான அம்மா உணவகங்களுக்கு ரசீது புத்தகங்கள் அச்சிட்டு பெறுவதற்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ.95000/– வரையிலும் செலவினம் ஏற்படுகிறது. நகராட்சி நிதி நலன் மற்றும் நிதி மேலாண்மையை கருத்தில் கொண்டு இந்நகராட்சியின் அம்மா உணவகங்களுக்கு பட்டியல் இயந்திரம் ( Builling Machine) இரண்டு எண்ணிக்கை கொள்முதல் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.52,000/–க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு — 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரியதில் 23–09–2022ம் தேதி அன்று வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் மெசர்ஸ் ஸ்ரீகிரிஜா எண்டர்பிரைசஸ் எண்.18, ரிபப்ளிக் தெரு, புதுச்சேரி என்ற நிறுவனத்தின் குறைந்த பட்ச விலைவிகிதம் (GST உட்பட) ரூ.50,740/– ஏற்று மேற்படி நிறுவனத்தில் கொள்முதல் செய்வதற்கு ஒப்புதல் | தீர்மானம் எண்.347<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அளிக்கலாம்.<br>3 இதற்கான செலவினத்தினை நகராட்சியின் அம்மா உணவக கணக்கில் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1958/2015/அ3 | |
| 27-10-2022 | பொருள் எண்.4<br>மாவட்ட ஆட்சித்தலைவரின் நேரடி ஆய்வின்போது நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அதிக அளவில் குப்பை தேங்கி இருப்பது கண்டறியப்பட்டு அதனை உடன் அப்புறப்படுத்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதன்படி உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.20,000/- மதிப்பீட்டில் முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் டிராக்டர் மூலம் குப்பைகள் அகற்றும் பணி மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு: 1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.2403/2022/எச்1 | தீர்மானம் எண்.348<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 27-10-2022 | பொருள் எண்.5<br>நாகூர் ஆண்டவர் கந்துாரி திருவிழா எதிர்வரும் 24-12-2022 ஆம் தேதி முதல் 09-01-2023 ஆம் தேதி வரை நடைபெறவுள்ளதால் பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ளவும் படிவம் 1-இன் அறிக்கையின்படி தேவையான கிருமிநாசினிகள் , மருந்துகள், எரிப்பொருள்கள் ஒப்பந்த அடிப்படையில் வாடகை டிராக்டர் மற்றும் தளவாடபொருட்கள் தருவித்து கொள்ளுவதற்கும், சிறப்பு துாய்மைப்பணிகள் மேற்கொள்வதற்கு மாவட்ட ஆட்சியத்தலைவரின் செயல்முறை ஆணை ந.க.எண்.7706/2022/ஈ1 , நாள்.01-07-2022 இல் நிர்ணயத்துள்ள நாள் ஒன்றுக்கு ரூ.470 விலைவிகிதத்திதன்படி தினக்கூலி அடிப்படையில் திருவிழா நடைபெறும் நாட்களுக்கு தற்காலிகமாக 100 துாய்மைப்பணியாட்களை அமர்த்திக்கொள்வதற்கும், உத்தேச செலவினத்தொகை ரூ.22.80 இலட்சத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்வதற்கும், படிவம் 1 அறிக்கையினை இயக்குநர், பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறைக்கு அனுப்புவதற்கும் நகராட்சி நிருவாக இயக்குநரின் அனுமதி வேண்டி கடிதம் அனுப்புவதற்கும் மற்றும் சிறப்பு துாய்மைப்பணிக்கு தேவையான கிருமிநாசினிகள் மற்றும் இதரபொருட்கள் தருவித்து கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் நாகூர் ஆண்டவர் கந்துாரி திருவிழா சிறப்பு சுகாதாரப்பணியின் அவசர அவசியத்தைக்கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதிப்பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு:<br>1 நாகூர் ஆண்டவர் கந்துாரி திருவிழா சிறப்பு சுகாதாரப்பணியின் அவசர அவசியத்தைக்கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் அனுமதிப்பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>2 உத்தேச செலவினத்தொகை ரூ.22.80 இலட்சத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.3865/2022/எச்1 | தீர்மானம் எண்.349<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 27-10-2022 | பொருள் எண்.6<br>நாகப்பட்டினம் நகராட்சியின் பொதுசுகாதாரப்பணி மற்றும் துாய்மை இந்தியா திட்டத்தின் கீழ் உரக்கிடங்குகளில் குப்பைகளை தரம் பிரித்து உரம் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் நகராட்சியின் பராமரிப்பில் கீழ் உள்ள இரண்டு பூங்கா ஆகிய இடங்களில் பாதுகாப்பு பணிக்கு 10 சீருடை காவலர்கள் மூலம் காவல் பணி மேற்கொள்வதற்கு இந்நகர்மன்றம் தனது தீர்மான எண். 213 நாள்.31-12-2021 இல் அனுமதி வழங்கியதின் பேரில் நாளது தேதி வரை பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் கடந்த 31-07-2021 ஆம் தேதி நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் நகராட்சி நிருவாக இயக்குநரால் நடத்தப்பட்ட காணொலிக்காட்சியில் மாநில அளவில் ஒப்பந்த அடிப்படையில் ( Outsourcing ) பணிபுரியும் தினக்கூலிப்பணியாளர்களுக்கு ஊதியம் நிர்ணயம் செய்து வழிகாட்டும் நெறிமுறைகள் விரைவில் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வுகளில் மேற்கண்ட ஒப்பந்த காலம் எதிர்வரும் 31-10-2022 ஆம் தேதியில் முடிவடைவதால் நகராட்சி நிருவாக இயக்குநரின் வழிகாட்டு நெறிமுறைகளை எதிர்நோக்கி M/S. ரேன்ஸ் இன்ஜினியரிங் நிறுவனத்தால் ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகிதத்தின்படி ( நாளொன்றுக்கு ஒரு நருக்கு ரூ.462 வீதம் ) 01-11-2022 ஆம் தேதி முதல் 10 சீருடை காவலர்கள் மூலம் பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி நிருவாக இயக்குநரின் நிருவாக அனுமதிப்பெற்று ஒப்பந்தபுள்ளிகோரி முடிவுக்கு வரும் வரையோ அல்லது 6 மாதங்கள் எது முன்னரோ அது வரை தொடர்ந்து பணிகள் மேற்கொள்வதற்கு தொடர்புடைய ஒப்பந்ததாரர் M/S, ரேன்ஸ் இன்ஜினியரிங் நிறுவனத்தாருக்கு ஆணை | தீர்மானம் எண்.350<br>அ.,கு அனுமதிக்கப்பட்டது |

வழங்குவதற்கும் உத்தேச செலவினத்தொகை ரூ.8.70 இலட்சத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
|---|---|---|

ந.க.எண்.2671/2020/எச்1

---

27–10–2022

பொருள் எண்.7

நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட காடம்பாடி ஏழைப்பிள்ளையார் கோவில் அருகாமையில் அமைந்துள்ள பூங்காவினை ரோட்டரி கிளப் ஆப் நாகப்பட்டினத்தின் மூலம் பராமரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பூங்காவினை பராமரிப்பு செய்யும் பணிக்காலம் தற்போது முடிவடைந்து விட்டபடியால் மீண்டும் மூன்று ஆண்டுகளுக்கு ரோட்டரி கிளப் ஆப் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கிட கோரி வரப்பெற்ற கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
|---|---|---|

ந.க.எண்.

தீர்மானம் எண்.351
அ.,கு அனுமதிக்கப்பட்டது

---

27–10–2022

பொருள் எண்.8

நாகப்பட்டினம் நகராட்சிக்குப்பட்ட பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2021–2022 ன் கீழ் அம்பேத்கார் நகர் நாகூர் பகுதியில் சமுதாயக்கூடம் கட்டிடம் கட்டும் பணிக்கு மதிப்பீடு ரூ.20.00 இலட்சத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நாகப்பட்டினம் அவர்களின் செயல் முறை ஆணை ந.க.எண்.685/2022/இ6 நாள்.05–09–2022ன் படி பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேற்கண்ட திட்டப்பணிக்கு 12–10–2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு

| வ. எண் | ஒப்பந்ததாரர்களின் விவரம் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்ட தொகை | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | எஸ்.கருணாநிதி , நாகப்பட்டினம் | 1670926.00 | 1670145.00 | 0,05 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | ஜி.தேவராஜ், நாகப்பட்டினம் | | 1689486.00 | 1.11 % மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட திட்டப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.எஸ்.கருணாநிதி ஒப்பந்ததார் நாகப்பட்டினம் என்பவரின் 0.05 சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| அலுவலககுறிப்பு | 1 | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ். கருணாநிதி ஒப்பந்ததாரர் நாகப்பட்டினம் என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம் |
|---|---|---|
| | 2 | திட்டப்பணியின் அவசர அவசியத்தினை கருதிநகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். |

ந.க.எண்.597/2022/இ1

தீர்மானம் எண்.352
அ.,கு அனுமதிக்கப்பட்டது

---

27–10–2022

பொருள் எண்.9

நாகப்பட்டினம் நகராட்சிக்குப்பட்ட பகுதியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம் 2021–2022 ன் கீழ் காடம்பாடி நகராட்சி நடுநிலை பள்ளியில் அங்கன்வாடி கட்டிடம் பழுதடைந்துள்ளதனை சீர் செய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ.2.75 இலட்சத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நாகப்பட்டினம் அவர்களின் செயல் முறை உத்தரவு ந.க.எண்.1198/2022/சி1 நாள்.23–09–2022ன் படி பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேற்கண்ட திட்டப்பணிக்கு 14–10–2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு

| வ. எண் | ஒப்பந்ததாரர்களின் விவரம் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்ட தொகை | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கே.ராஜேந்திரன் , நாகப்பட்டினம். | ரூ.241343 | ரூ.241232/– | 0,05 % மதிப்பீட்டை விட குறைவு |

தீர்மானம் எண்.353
அ.,கு அனுமதிக்கப்பட்டது

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | வி.ஆர்.பிரபாகரன், நாகப்பட்டினம் | | ரூ.244340 | 1.24% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட திட்டப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.கே.ராஜேந்திரன் ஒப்பந்ததாரா் நாகப்பட்டினம் என்பவரின் 0.05 சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. கே.ராஜேந்திரன் ஒப்பந்ததாரா் நாகப்பட்டினம் என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்
2. இதற்கான கூடுதல் செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. திட்டப்பணியின் அவசர அவசியத்தினை கருதிநகா்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3785/2022/இ1

---

27-10-2022

பொருள் எண்.10

நாகப்பட்டினம் நகராட்சிக்குப்பட்ட பகுதியில் சட்டமன்ற உறுப்பினா் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2021-2022 ன் கீழ் முனிசிபல்பேட்டை நாகப்பட்டினம் பகுதியில் சமுதாயக்கூடம் கட்டிடம் கட்டும் பணிக்கு மதிப்பீடு ரூ.20.00 இலட்சத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவா் மற்றும் தலைவா் மாவட்ட ஊரக வளா்ச்சி முகமை நாகப்பட்டினம் அவா்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.685/2022/இ6 நாள்.05-09-2022ன் படி பணியினை மேற்கொள்ள நிா்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடா்ந்து மேற்கண்ட திட்டப்பணிக்கு 12-10-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு

| வ. எண் | ஒப்பந்ததாரா்களின் விவரம் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்ட தொகை | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | பி.ரகுநாதன், நாகப்பட்டினம் | 1670926.00 | 1670145.00 | 0,05 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | கே.கோபாலகிருஷ்ணன், நாகப்பட்டினம் | | 1703181.00 | 1.93% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட திட்டப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.பி.ரகுநாதன் ஒப்பந்ததாரா் நாகப்பட்டினம் என்பவரின் 0.05 சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.பி.ரகுநாதன் ஒப்பந்ததாரா் நாகப்பட்டினம் என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்
2. திட்டப்பணியின் அவசர அவசியத்தினை கருதி நகா்மன்றதலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்597/2022/இ1

தீா்மானம் எண். 354
அ.,கு அனுமதிக்கப்பட்டது

---

27-10-2022

பொருள் எண்.11

நாகப்பட்டினம் நகராட்சிக்குப்பட்ட பகுதியில் சட்டமன்ற உறுப்பினா் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2021-2022 ன் கீழ் நாகப்பட்டினம் டாடா நகா் பகுதியில் அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணிக்கு ( வாா்டு எண்36) மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவா் மற்றும் தலைவா் மாவட்ட ஊரக வளா்ச்சி முகமை நாகப்பட்டினம் அவா்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.685/2022/இ6 நாள்.05-09-2022ன் படி பணியினை மேற்கொள்ள நிா்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடா்ந்து மேற்கண்ட திட்டப்பணிக்கு 30-09-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு

| வ. எண் | ஒப்பந்ததாரா்களின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ | ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்ட தொகை | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு |
|---|---|---|---|---|

தீா்மானம் எண். 355
அ.,கு அனுமதிக்கப்பட்டது

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| 1 | பி.சிவசக்தி, நாகப்பட்டினம் | 936240.00 | 935861.00 | 0,04 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | எஸ்.சத்தியநாராயணன், நாகப்பட்டினம் | | 950113.00 | 1.48% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட திட்டப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.பி.சிவசக்தி ஒப்பந்ததாரா் நாகப்பட்டினம் என்பவரின் 0.04 சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.பி.சிவசக்தி ஒப்பந்ததாரா் நாகப்பட்டினம் என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம் |
| | | திட்டப்பணியின் அவசர அவசியத்தினை கருதி நகா்மன்றதலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். |

ந.க.எண்597/2022/இ1

27–10–2022

பொருள் எண்.12

நாகப்பட்டினம் நகராட்சிக்குப்பட்ட பகுதியில் சட்டமன்ற உறுப்பினா் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2021–2022 ன் கீழ் நாகப்பட்டினம் சேவாபாரதி பகுதியில் அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணிக்கு (வாா்டு எண்.35) மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவா் மற்றும் தலைவா் மாவட்ட ஊரக வளா்ச்சி முகமை நாகப்பட்டினம் அவா்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.685/2022/இ6 நாள்.05–09–2022ன் படி பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடா்ந்து மேற்கண்ட திட்டப்பணிக்கு 30–09–2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு

| வ. எண் | ஒப்பந்ததாரா்களின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ | ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்ட தொகை | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | எஸ்.சத்தியநாராயணன், நாகப்பட்டினம் | 936237.12 | 935973.44 | 0,03 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | ஆா்.பி.சந்திரகாந்தன், நாகப்பட்டினம் | | 950576.05 | 1.53% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட திட்டப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு. எஸ்.சத்தியநாராயணன் ஒப்பந்ததாரா் நாகப்பட்டினம் என்பவரின் 0.03 சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. எஸ்.சத்தியநாராயணன் ஒப்பந்ததாரா் நாகப்பட்டினம் என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம் |
| | 2 | திட்டப்பணியின் அவசர அவசியத்தினை கருதி நகா்மன்றதலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். |

ந.க.எண்597/2022/இ1

தீா்மானம் எண்.356
அ.,கு அனுமதிக்கப்பட்டது

27–10–2022

பொருள் எண்.13

மாவட்ட ஆட்சித்தலைவரின் நேரடி ஆய்வின்போது நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அதிக அளவில் குப்பை தேங்கி இருப்பது கண்டறியப்பட்டு அதனை உடன் அப்புறப்படுத்த அறிவிரைகள் வழங்கப்பட்டுள்ளதன்படி உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.20,000/–க்குள் முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் டிராக்டா் மூலம் குப்பைகள் அகற்றும் பணி மேற்கொள்வதற்கு கடந்த 24–06–2022 ஆம் தேதி விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படியாக இரண்டு விலைப்புள்ளி மட்டும் வரப்பெற்றதன் விவரம் பின்வருமாறு

| வ. எண் | விலைப்புள்ளிதாரா் பெயா்மற்றும் முகவரி | பணியின் விவரம் | மதிப்பீட்டு விலை விவரம் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | எஸ்.சத்தியநாராயணன், நாகப்பட்டினம் | பொது சுகாதாரம் பணியின் கீழ் நாகப்பட்டினம் நகர | ரூ.2,700/–நாள் ஒன்றுக்கு |

தீா்மானம் எண்.357
அ.,கு அனுமதிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| 2 | வி.ஆர்.பிரபாகரன் ,<br>நாகப்பட்டினம் | எல்லைக்குட்பட்ட பகுதிகளில்<br>வாடகை டிராக்டர் மூலம்<br>குப்பைகள் சேகரிக்கும் பணி | ரூ.3,000/–நாள்<br>ஒன்றுக்கு |

மேற்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1 இல் கண்டுள்ள எஸ்.சத்தியநாராயணன ஒப்பந்தகாரரால் நாள் ஒன்றுக்கு ரூ.2700/–க்கு கொடுக்கப்பட்டுள்ள விலை விகிதத்தினை ஏற்க பணியின் அவசர அவசியத்தைக்கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் அனுமதிப்பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 2 | உத்தேச செலவினத்தொகை ரூ.20.000/ஐ பொது நிதியில் வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம். |

ந.க.எண்2403/2022/எச்1

| | | |
|---|---|---|
| 27–10–2022 | பொருள் எண்.14<br>நகரமன்ற உறுப்பினர் திருமதி.கு.ஜோதிலெட்சுமி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம் –<br>❖ 15–வது வார்டானது நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கும், நாகூர் அரசு மருத்துவமனைக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ளதால் 15வது வார்டில் ஆரம்ப சுகாதரநிலையம் அமைக்க வேண்டும், ஆரம்ப சுகாதரநிலையம் அரசு குடியிருப்பு வாளகத்திற்கு எதிரே அமைந்துள்ள கடந்த காலங்களில் ஆடுமாடுகளை அடைத்து வைக்கும் பட்டி அமைந்துள்ள இடைத்தில் ஆரம்ப சுகாதரநிலையம் அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுகொள்கிறேன். | தீர்மானம் எண்.358<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 27–10–2022 | பொருள் எண்.15<br>நகரமன்ற உறுப்பினர் திருமதி.க.சுந்தரேஸ்வரி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம் –<br>❖ 20 – வது வார்டுக்குட்பட்ட சிவன் தெற்கு வீதியில் சலவை தொழிலாளர்கள் வசிக்கு பகுதி மற்றும் வீரி குளம் சந்து ஆகிய பகுதிகளில் தெருவிளக்கு பொருத்துவதற்கு மின் கம்பி வசதியில்லாததால், மேற்படி பகுதிகளுக்கு புதிதாக தெரு மின் விளக்கு அமைத்துதர இத்தீர்மானம் மூலம் கேட்டுகொள்கிறேன். | தீர்மானம் எண்.359<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 27–10–2022 | பொருள் எண்.16<br>நகரமன்ற துணைத்தலைவர் திரு.எம்.ஆர்.செந்தில்குமார் அவர்களால் முன்மொழியப்பட்டு நகரமன்ற உறுப்பினர் திரு.ஹீ.முஹம்மது சேக்தாவூது அவர்களால் வழிமொழியப்பட்டு கொண்டுவரப்படும் தீர்மானம் –<br>❖ நாகப்பட்டினம் நகரமன்றத்தில் நகரமன்ற உறுப்பினராக பதவி வகித்து 14–10–2022 அன்று இயற்கை எய்தியை திரு.வை.நடராஜபிள்ளை அவர்களுக்கு மன்றத்தில் இரங்கல் நிறைவேற்ற கோரும் தீர்மானம். | தீர்மானம் எண்.360<br>தீர்மாணிக்கப்பட்டது |

/உண்மை நகல்/

(ஒம்) இரா.மாரிமுத்து
நகரமன்ற தலைவர்

நாகப்பட்டினம் நகராட்சி

**2022–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31–ம் நாள் திங்கள் கிழமை காலை 4.30 மணியளவில்**
**நடைபெற்ற நகரமன்ற அவசர கூட்ட நடவடிக்கையின் தீர்மான நகல்**

| கூட்ட நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்களின் விபரம் | தீர்மான எண் |
|---|---|---|
| 31–10–2022 | பொருள் எண்.1<br>தமிழ்நாடு அரசிதழில் 24–06–2022 ஆம் நாளிட்ட அரசிதழ் எண்.358 பகுதி III பிரிவு 1(9)–இல் அரசாணை (நிலை) )எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்,24–06–2022 இன்படி வார்டு குழு ( Ward Committee) மற்றும் பகுதி சபா (Area Sabha) உருவாக்குவதற்கும் மற்றும் அதன் செயல்படுத்துதலுக்கும் விதிகள் குறித்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்காணும் அரசாணையில் வார்டு குழுக்கள் அமைக்கவும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் (வார்டு குழு மற்றும் பகுதி சபா) விதிகள் 2022–இல் விதி 3(1) இன்படி வார்டு குழுக்களுக்கு விதி 8–இல் குறிப்பிட்டுள்ளவாறு நகராட்சி பகுதி வார்டு ஒன்றினை நான்கு பகுதி சபாக்களாக பிரித்து ஒவ்வொரு பகுதி சபாவிற்கும் ஒரு பிரதிநிதியை நியமிக்கவும் நகர்மன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் ( வார்டு குழு மற்றும் பகுதி சபா) விதிகள் 2022 விதி 9இன் படி 36 வார்டு பகுதியை 144 பகுதி சபாக்களாக மறுவரையறை ( Delimit) செய்யப்பட்டு வார்டு குழு மற்றும் பகுதி சபா உறுப்பினர்களை அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின் படி இணைப்பில் கண்டுள்ள பட்டியலில் உள்ளவார்டு குழு மற்றும் பகுதி சபா உறுப்பினர்களை தேர்வு செய்ய மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு — 1. அசராணையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி சம்மந்தப்பட்ட வார்டு வாக்காளர் பட்டியலில் சம்மந்தப்பட்ட பகுதிக்குரிய வாக்காளர்களாகவும் மற்றும் நகராட்சி வார்டு உறுப்பினர் பதவிக்குரிய தகுதிகள் கொண்ட நபர்களை வார்டு குழு மற்றும் பகுதி சபா உறுப்பினர்களாக மன்றம் தேர்வு செய்யலாம்.<br>ந.க.எண். 3145/2022/எப்1 | தீர்மானம் எண்.361<br>அ.கு.அங்கீகரிக்கப்பட்டது |
| 31–10–2022 | பொருள் எண்.2<br>தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் விதிகள் 2022–ன்படி வார்டு குழு மற்றும் பகுதி சபா உருவாக்குவதற்கும் மற்றும் அதன் செயல்பாடுகளுக்கும் செயலாளர்கள் நியமிப்பது மற்றும் செயலாளரின் பணிகள் குறித்து வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண்.93 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26–06–2022 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. அரசாணையின்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.24470/2019/எம் ஏ2 நாள்.21–10–2022 மற்றும் 27–10–2022ல் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளின் படி வார்டு குழு மற்றும் பகுதி சபாக்களுக்கான செயலாளர்கள் நியமித்திட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு — 1. மன்றம் பதிவு செய்யலாம்<br>2. அசராணை மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அறிவுரையின்படி வார்டு குழு மற்றும் பகுதி சபாகளுக்கான செயலாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ள பட்டியலை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண். 3145/2022/எப்1 | தீர்மானம் எண்.362<br>அ.கு.அங்கீகரிக்கப்பட்டது |

/உண்மை நகல்/

(ஒம்) இரா.மாரிமுத்து
நகரமன்ற தலைவர்

நாகப்பட்டினம் நகராட்சி

**2022–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31–ம் நாள் திங்கள் கிழமை காலை 5.00 மணியளவில் நடைபெற்ற நகரமன்ற அவசர கூட்ட நடவடிக்கையின் தீர்மான நகல்**

| கூட்ட நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்களின் விபரம் | | | தீர்மான எண் |
|---|---|---|---|---|
| 31–10–2022 | பொருள் எண்.1<br>அரசு உத்தரவின்படி வார்டு குழு மற்றும் பகுதி சபா அமைத்திடும் பொருட்டு நாகப்பட்டினம் நகராட்சி பகுதியில் உள்ள 36 வார்டுகளில் பிரிக்கப்பட்டுள்ள தெருக்களின் பட்டியல் மற்றும் எல்லைகளின் விவரப்பட்டியல் மற்றும் இணைப்பில் கண்டுள்ள பரிந்துரைக்கப்பட்ட (Nominated Persons ) 144 பகுதி சபா உறுப்பினர்களை தேர்வு செய்ததை உறுதி செய்ய மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. | | | தீர்மானம் எண்.363<br>அ.கு.அங்கீகரிக்கப்பட்டது |
| | அலுவலக குறிப்பு | 1 | மேற்கண்ட உறுப்பினர்கள் அனைவரும் வார்டு சபா உறுப்பினராக விருப்பம் தெரிவித்துள்ளதாலும் மற்றும் உரிய தகுதியுடன் உள்ளதாலும் மேற்கண்ட உறுப்பினர்களை தேர்வு செய்தவற்கு மன்றம் உறுதியளிக்கலாம். | |
| | ந.க.எண். 3145/2022/எப்1 | | | |

/உண்மை நகல்/

(ஒம்) இரா.மாரிமுத்து
நகரமன்ற தலைவர்